# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C.)
## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE UTHUKULI

| | | |
|---|---|---|
| Case No. | : | STC 463-2025 |
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | ரங்கராஜ் |
| Father Name | : | பழனிசாமி |
| Village | : | ஊத்துக்குளி |
| Taluk | : | ஊத்துக்குளி |
| Age | : | 48 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07.03.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஊத்துக்குளி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வேறு அலுவலில் உள்ளதால் வழக்கின் விசாரணை விரைந்து முடிக்கும் பொருட்டு வழக்கு கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 08.03.2025 அன்று ஊத்துக்குளி காவல் நிலைய காவல் ஆய்வாளர் பர்வீன் பானு அவர்களுடன் PC 1855 வினோத்குமார் மற்றும் PC 2414 அருள்குமார் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்றத் தடுப்பு ரோந்து அலுவலாக ஊத்துக்குளி டவுன், ஊத்துக்குளி RS, கூலிப்பாளையம் நால்ரோடு ஆகிய இடங்களில் கண்காணித்து கொண்டிருந்தனர்.

3. அப்போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 10.00 மணிக்கு கூலிப்பாளையம் நால்ரோடு, பேங்க் ஆப் பரோடா பின்புறம் கண்காணித்த போது ஒரு நபர் கையில் நைலான் சாக்குப்பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றிருந்தார். போலீஸ் பார்ட்டியை கண்டதும் அவர் அங்கிருந்து செல்ல முயற்சித்தார்.

4. உடன் இருந்த போலீஸ் பார்ட்டியினர் அவரை பிடித்து விசாரிக்க, அவர் தனது பெயர் அழகர்சாமி, வயது 46, த/பெ. கோபால், 571, வீராக்குளம், உடையானேந்தல், சாத்தரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம், தற்போது கூலிப்பாளையம் நால்ரோடு, ஊத்துக்குளி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் என்று கூறியும் அரசு அனுமதியின்றி மதுபாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார்.

5. இதனால் அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக மதுபாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி எதிரியை காரணம் கூறி 10.10 மணிக்கு கைது செய்துள்ளனர். பின்னர் எதிரி தானாக எடுத்து ஆஜர் செய்த 180 ML அளவு கொண்ட EXPRESS பிராந்தி பாட்டில்கள் – 10, ஆகியவற்றை பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் உடன் இருந்த PC 1855 வினோத்குமார் மற்றும் PC 2414 அருள்குமார் முன்னிலையில் 10.20 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றியுள்ளனர்.

6. மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளனர். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 11.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது ஊத்துக்குளி காவல் நிலைய குற்ற எண் 128/2025 U/s 4(1)(C) TNP Act இன் படி வழக்கு பதிவு செய்துள்ளனர். **(முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது), (கைப்பற்றுதல் மகஜர் அரசு தரப்பு சான்று ஆவணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 180 ML அளவு கொண்ட EXPRESS பிராந்தி பாட்டில்கள் – 10, அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சாட்சிகளான வினோத்குமார் மற்றும் அருள்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். **(படிவம் 91 அரசு தரப்பு சான்று ஆவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரியை கைது செய்து தக்கப்பிணையில் விடுவித்து புலன் விசாரணை

முடித்து எதிரி மீது U/s 4(1)(C) TNP Act இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. தமிழ்நாடு அரசின் மது விதிகள் படி ஒரு தனிநபர் பிராந்தி/விஸ்கி 4.5 லிட்டர், பீர் 7.8 லிட்டர் வரை வைத்துக் கொள்ள அனுமதி உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மது வகைகள் அரசு மதுபான கடைகளில் விற்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட மது வகைகள் என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து மதுபானத்தை விற்ற தொகை எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுபானத்தை வாங்கியதாக தனிநபர் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அதன் காரணமாக எதிரியின் மீது மதுபாட்டிலை விற்பனைக்காக வைத்திருந்தார் என்று சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு முகாந்திரமற்றது என்றால் சரியல்ல.

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக இந்த வழக்கில் பொருட்கள் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரும், புலன்விசாரணை அதிகாரியும் ஒருவராக இருப்பது விதிகளுக்கு முரண்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரக் கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.07 16:39:54 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஊத்துக்குளி.**